தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.8 நாள் 26.03.2026

| SC. No. | 76/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | த/பெ. | பொன்னம்பலம் |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

**(1 முதல் 6 எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் உணவு பாதுகாப்பு அலுவலராக சீர்காழி வட்டாரத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 13.06.2024 அன்று நானும், வைத்தீஸ்வரன் கோவில் காவல் ஆய்வாளர் இணைந்து வைத்தீஸ்வரன் நகர பஞ்சாயத்தில் அரசால் தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் மற்றும் போதை பொருட்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது, விநாயகர் நகர் குடோனிற்கு அருகில் ஒரு பொலிரோ வேன் நின்று கொண்டிருந்தது. அதை ஆய்வு செய்தபோது அதில் ஹான்ஸ் 600 கி.கி. , விமல் பான் மசாலா 100 கி.கி, கூலிப் மற்றும் ஆர்.எம்.டி 25.200 கி.கி ஆகியவை கைப்பற்றப்பட்டது. பின்பு, அதிலிருந்து ஹான்ஸ் தலா 300 கி (4 பாக்கெட்) மற்றும் விமல் பான் மசாலா ஆகியவை மாதிரிக்காக கைப்பற்றப்பட்டு என்னால் மதுரை உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் படிவம் 6 மூலமாக மாதிரியை மதுரை உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 6 **அ.சா.ஆ. 11** ஆகும். 28.06.2024 அன்று மதுரை உணவு பகுப்பாய்வு கூடத்திலிருந்து அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கை **அ.சா.ஆ. 12** ஆகும். போலீசார் இது குறித்து என்னை விசாரித்தனர்.

CJM, MAYILADUTHURAI.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

தடயபொருட்கள் பொறுத்தவரை நான் பகுப்பாய்வு செய்யவில்லை. சான்று வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. நான் சான்றும் வழங்கவில்லை. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான் போலீசாரிடம் தடயபொருளை பகுப்பாய்வு செய்து சான்று வழங்கியதாக கூறவில்லை.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.